# தூத்துக்குடி நகரமன்றம்
# அவசரக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(2)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதை தொடர்ந்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு அணிவிக்கப்படும் தங்க ஆபரணம் (செயின்) நன்கொடையாக பெற மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்

இ1. 018217/08

**தீர்மானம் எண்: 412**

அலுவலகக்குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

2. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு வெள்ளி செஙகோல் நன்கொடையாக பெற மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்

இ1. 018217/08

**தீர்மானம் எண்: 413**

அலுவலகக்குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3. தூத்துக்குடி நகரின் மத்திய பகுதியிலுள்ள பக்கிள் ஓடையானது 5. 89 கி.மீ. நீளம் தூரம் சென்று இறுதியாக கடலில் கலக்கின்றது. தற்போது மேற்கண்ட பக்கிள் ஓடையானது பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. மேற்கண்ட ஓடையில் கழிவுநீர் செல்வதால் மேற்கண்ட பக்கிள் ஓடையை சீரமைப்பு பணிகள் செய்ய அவசியமாகின்றது.

மேலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற மானிய கோரிக்கையில் பக்கிள் ஓடை சீரமைப்பு பணி படிப்படியாக செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் (TNUIFSL)மூலம் சீரமைப்பு பணிகள் செய்ய விரிவான திட்ட அறிக்கையின் இறுதி அறிக்கை தொழில் நுட்ப வல்லுநர் நிறுவனம் மூலம் தயார் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணியை K.F.W திட்டத்தில் ரூ 29. 50 கோடி கடன் நிதி உதவியுடன் செயல்படுத்தவும் , அதற்கான மதிப்பீட்டிற்கும் நிர்வாக அனுமதி கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

## அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. TNUIFSL மூலம் K.F.W திட்டத்தில் கடன் உதவி பெற்று அதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிர்வாக அனுமதிக்கு பிரேரனை அனுப்புவதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ1. 018217/08

**தீர்மானம் எண்: 414**

அலுவலகக்குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது

4. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட இந்நகராட்சிப் பள்ளிகளில் மேம்பாடு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப் படுகின்றது.

| வ. எண் | மேம்பாடு செய்யப்படும் பள்ளிகள் விபரம் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | லெவஞ்சிபுரம் நகராட்சிப் பள்ளி புதிய கட்டிடம் கட்டுதல் | 22. 50 |
| 2 | ஜின் பாக்டரி ரோடு நகராட்சிப் பள்ளி புதிய கட்டிடம் கட்டுதல் | 15. 00 |
| 3 | செவந்தாகுளம் ரோடு நகராட்சிப் பள்ளி புதிய கட்டிடம் கட்டுதல் | 22. 50 |
| 4 | வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு நகராட்சி பள்ளி புதிய கட்டிடம் கட்டுதல் | 20. 00 |
| 5 | பாண்டுரெங்கன் தெரு நகராட்சிப் பள்ளி புதிய கட்டிடம் கட்டுதல் | 15.00 |
| 6 | தெற்கு புதுத்தெருவில் நகராட்சிப் பள்ளி மராமத்து பணி செய்தல் | 15.00 |
| 7 | சாமுவேல்புரம் தெரு நகராட்சிப் பள்ளி மராமத்து பணி செய்தல் | 15.00 |
| 8 | சண்முகபுரம் தெரு நகராட்சிப் பள்ளி மராமத்து பணி செய்தல் | 13.00 |
| 9 | டூவிபுரம் நகராட்சிப் பள்ளி மராமத்து பணி செய்தல் | 10.00 |
| 10 | கிரேட் காட்டன் ரோடு நகராட்சிப் பள்ளி மராமத்து பணி செய்தல் | 15.00 |
| 11 | வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு நகராட்சிப் பள்ளி மராமத்துப் பணி செய்தல் | 12.00 |
| 12 | ரகுமதுல்லாபுரம் நகராட்சி நடுநிலைப் பள்ளி மராமத்துப் பணி செய்தல் | 10. 00 |
| 13 | வடக்கூர் நகராட்சி ஆரம்பப் பள்ளி மராமத்துப் பணி செய்தல் | 10. 00 |
| | மொத்தம் | 195.00 |

## அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்
2. நகராட்சி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 857/08

**தீர்மானம் எண்: 415**

அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது